**<u>காமராஜர் பிறந்தநாள்</u>**

புஷ்பலதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா 15.07.2023 அன்று பள்ளி வளாகத்தில் கொண்டாடப்பட்டது. விழாவில் 11,12ஆம் வகுப்பு மாணவர்கள் 'காமராசரின் வாழ்க்கை வரலாறு' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினர். மேலும், காமராசரின் புகழ் போற்றும் கவிதைகளைத் தாங்களே எழுதி சுவைபட வாசித்தளித்தனர். பள்ளியின் முதுகலைத் தமிழாசிரியர் 'காமராசர் தமிழகத்திற்கு ஆற்றிய பணிகள்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். முன்னதாக 1 முதல் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் காமராஜர் வேடமணிந்து நடிக்கும் பங்கு நாடகம், ஓவியம், உருவச்சிலை செய்தல் உள்பட பல்வேறு செயல்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன.